31st January 1963]

கனம் திரு. எம். பக்தவத்சலம்: சில அமைச்சர்கள் அப்பொழுது சேலத்திற்குப் போயிருந்தார்கள். ஆனால் யாரும் இதற்காகப் பிரயாணப்படி வாங்கவில்லை.

திரு. எஸ். மாதவன்: இது போன்று கனம் அமைச்சர்கள் சுற்றுப்பிரயாணம் செய்யும்போது அதிகாரிகள் உடன் செல்லுவது முறையா? கனம் திரு. பூவராகன் அவர்கள் வந்திருந்தபோது அதிகாரிகள் இருக்கும்போது சில காங்கிரஸ் பேச்சாளர்கள் என்னைத் திட்டிவிட்ட காரணத்தால் இப்பொழுது அதிகாரிகளை சந்திப்பதே கஷ்டமாக இருக்கிறது. ஆகவே அதிகாரிகள் கூட வருவதைத் தவிர்க்க முடியுமா?

கனம் திரு. எம். பக்தவத்சலம்: வேலையிருந்தால் அதிகாரிகள் வருகிறார்கள். இது தவிர்க்க முடியாதது. அதிகாரிகள் வருவதினால் கனம் அங்கத்தினர்களுக்கு பாதகம் ஏற்படாது.

திரு. கே. ஏ. மதியழகன்: உப தேர்தல் காலத்தில் மற்ற மாநிலங்களில் நடைமுறையில் அனுசரித்துக் காட்டியதுபோல, நமது அமைச்சர்களும் தேர்தல் பிரசாரத்தில் ஈடுபடாமல் இருப்பார்களா?

கனம் திரு. எம். பக்தவத்சலம்: வேறு எந்த மாநிலத்திலிருந்தும் இந்த மாநில அரசாங்கம் பாடம் கற்றுக்கொள்ள வேண்டியதில்லை. எல்லாம் ஒழுங்காகத்தான் நடைபெற்றுக் கொண்டு வருகிறது.

திரு. இரா. நெடுஞ்செழியன்: தேசிய நெருக்கடி நிலைமையை ஒட்டி கனம் அமைச்சர்களுடைய சுற்றுப்பயணத் திட்டங்கள் குறைக்கப்பட்டிருக்கின்றனவா என்பதை அறிய விரும்புகிறேன்.

கனம் திரு. எம். பக்தவத்சலம்: குறைக்கப்பட்டிருக்கின்றன என்றே சொல்லலாம்.

திரு. முனு ஆதி: தேசிய நெருக்கடி தீருகிறவரையில், அமைச்சர்களின் சுற்றுப்பிரயாணப் படியை தேசிய பாதுகாப்பு நிதிக்குக் கொடுக்க முன் வந்திருக்கிறார்களா? அப்படியில்லை என்றால் இனிமேலாவது கொடுக்க முன் வருவார்களா?

கனம் திரு. எம். பக்தவத்சலம்: பிரயாணப்படி ஏதோ ஊதியம் பெறுகிறமாதிரி இல்லை. செலவு செய்கிற பணம்தான் கொடுக்கப்படுகிறது. பிரயாணத்திற்காக கையைவிட்டு செலவு செய்ய முடியாது.

Loans to Ryots

* 30-*C* Q.—SRI R. S. VEERAPPA CHETTIAR: Will the Hon. the Chief Minister be pleased to state—

The steps taken for the speedy disbursement of loans to the ryots in the Block Development areas?

THE HON. SRI M. BHAKTAVATSALAM: A statement [a] is placed on the table of the House.

[a] Printed as Appendix II on pages 297–298.